பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 622 **நாள்:** 28.10.2026

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மின்னணுக் கழிவுகளை (E-Waste) வீடுகள்தோறும் சென்று சேகரிக்கும் சிறப்பு முகாம் 31.10.2026 அன்று நடைபெறவுள்ளது.

மாநகராட்சியின் இந்த நடவடிக்கைக்கு பொதுமக்கள், குடியிருப்போர் நலச் சங்கங்கள், கல்வி நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் முழு ஒத்துழைப்பு வழங்கிட மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள்.

இந்திய அரசால், மின்னணுக் கழிவுகளைத் திறம்படச் சேகரித்தல், தரம் பிரித்தல் மற்றும் முறையாக அகற்றுதல் ஆகியவற்றை உறுதி செய்வதற்கும், இது தொடர்பான நடவடிக்கைகளை உரிய முறையில் ஒருங்கிணைப்பதற்கும், சிறப்பு இயக்கம் 6.0 (Special Campaign 6.0) என்ற முன்னெடுப்பினை அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் தூய்மை பணியாளர்கள் மூலம் **31.10.2026 அன்று** வீடுகள் தோறும் சென்று மின்னணுக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் சேகரித்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் மறுசுழற்சி செய்வதை ஊக்குவிக்கும் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது.

பொதுமக்கள் தங்களிடம் பயன்படுத்தப்படாமல் உள்ள அல்லது பழுதடைந்த மின்னணு மற்றும் மின்சாதனக் கழிவுகளான பழைய கைபேசிகள், மின்னேற்றிகள் (Chargers), கணினிகள், மடிக்கணினிகள், விசைப்பலகைகள், மின்கம்பிகள் மற்றும் இதர மின்னணுச் சாதனங்களை 31.10.2026 அன்று நடைபெற இருக்கும் சிறப்பு சேகரிப்பு பணியின் போது ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மின்னணுக் கழிவுகளை வீட்டுக் குப்பைகளுடன் கலக்காமல் தனியாகச் பிரித்து தூய்மைப் பணியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அவற்றைப் பொது இடங்களிலோ, சாலையோரங்களிலோ அல்லது நீர்நிலைகளிலோ வீசுவதைத் தவிர்க்க வேண்டும். மின்னணுக் கழிவுகளை முறையற்ற வகையில் அகற்றுவது சுற்றுச்சூழல் மாசுபாட்டையும், பொதுமக்களின் உடல்நலத்திற்குப் பாதிப்புகளையும் ஏற்படுத்தக்கூடும்.

இந்த சிறப்பு சேகரிக்கும் பணியின் போது சேகரிக்கப்படும் மின்னணுக் கழிவுகளை, உரிய விதிமுறைகளின்படி, அங்கீகரிக்கப்பட்ட மின்னணுக் கழிவு மறுசுழற்சி நிறுவனங்கள் மூலம் முறையாகச் செயலாக்கப்படும்.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியின் இம்முயற்சிக்கு பொதுமக்கள், குடியிருப்போர் நலச் சங்கங்கள் (RWAs), கல்வி நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் முழு ஒத்துழைப்பு அளித்து, மின்னணுக் கழிவுகளை முறையாக ஒப்படைத்து, தூய்மையான மற்றும் பசுமையான சென்னையை உருவாக்கப் பங்களிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.

GREATER CHENNAI CORPORATION

PRESS RELEASE

P.R.No. 621 Date : 28.10.2026

Special Door-to-Door Collection Drive for E-Waste – 31.10.2026

The Government of India has instructed all rural and urban local bodies to undertake **Special Campaign 6.0** to ensure the effective collection, segregation and proper disposal of **E-waste** and to facilitate appropriate coordination of related activities.

As part of this initiative, the Greater Chennai Corporation will conduct a **special door-to-door E-waste collection drive on 31.10.2026**, through its Conservancy workers, to collect electronic waste safely from households and promote its environmentally sound recycling.

The public is requested to hand over their unused or discarded electronic and electrical items, such as old mobile phones, chargers, computers, laptops, keyboards, electrical cables and other electronic devices, to the conservancy workers during the special collection drive scheduled for **31.10.2026**.

The public is advised to segregate the E-waste from household waste and hand it over separately to the conservancy workers. E-waste should not be dumped in public places, along roadsides or into water bodies. Improper disposal of E-waste may cause environmental pollution and pose risks to public health.

The E-waste collected during this special drive will be channelled for proper processing and recycling through authorized E-waste recycling agencies, in accordance with the applicable rules and regulations.

Therefore, the Greater Chennai Corporation appeals to all residents, Resident Welfare Associations (RWAs), Educational Institutions, commercial establishments and other stakeholders to extend their full cooperation by handing over E-waste through this special collection drive and contributing towards a clean, green and sustainable Chennai.

Issued by : Joint Director/Public Relations Officer,
Greater Chennai Corporation